## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 54/2016

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு ஜுலை மாதம் 18 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மோகன் | மதம் | : |
| த/பெ | : ராதாகிருஷ்ணன் | ஜாதி | : |
| வயது | : | கிராமம் | : |
| தொழில் | : | வட்டம் | : |

18.07.2024

**பி.வா.சா. 1 ன் முதல் விசாரணை தொடர்ச்சி**

1. 09.11.1967ம் தேதியிட்ட கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். (**கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ 1 குறியீடு செய்யப்படுகிறது**) 06.03.2002ம் தேதியிட்ட நாகராஜ் மற்றும் 5ம் பிரதிவாதியிடமிருந்து என் அப்பா கிரையம் பெற்ற கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். (**கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ 2 குறியீடு செய்யப்படுகிறது**) என் அப்பா இறப்புச் சான்றிதழ் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். (**இறப்புச் சான்றிதழ் பி.வா.சா.ஆ 3 குறியீடு செய்யப்படுகிறது**) என் அம்மா இறப்புச் சான்றிதழ் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். (**அம்மாவின் இறப்புச் சான்றிதழ் பி.வா.சா.ஆ 4 குறியீடு செய்யப்படுகிறது**)

2. என் அப்பாவின் வாரிசுச் சான்றிதழ் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். (**வாரிசு சான்றிதழ் பி.வா.சா.ஆ 5 குறியீடு செய்யப்படுகிறது**) என் அப்பா பெயரில் பட்டா எண்.704ல் உள்ள கணினி

பட்டா தாக்கல் செய்கிறேன். (**கணினி பட்டா பி.வா.சா.ஆ 6 குறியீடு செய்யப்படுகிறது**) என் அப்பா பெயரில் உள்ள வரி ரசீது தாக்கல் செய்கிறேன். (**வரி ரசீது பி.வா.சா.ஆ 7 குறியீடு செய்யப்படுகிறது**) தாவா சொத்திற்கான சாகுபடி அடங்கல் (23 எண்ணம்) சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். (**சாகுபடி அடங்கல் பி.வா.சா.ஆ 8 வரிசை (23 எண்ணம்) குறியீடு செய்யப்படுகிறது**) வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)